DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 8/2018

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 5 (LW12)
Defence

Name : Michael Irudhayaraj

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 15th July 2025.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது திருவெண்ணெய்நல்லூா் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு கோட்டக்குப்பம் காவல்நிலையத்தில் ஆய்வளாராக பணிபுரிந்தபோது 08.11.2017 தேதி காலை 8.00 மணியளவில் உதவி ஆய்வாளா் மனோகரன் என்பவா் நிலைய பொறுப்பில் இருந்தபோது சின்னமுதலியாா் சாவடி குப்பத்தை கிராமத்தைச் சோ்ந்த நரேஷ் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை

பெற்று காவல்நிலைய குற்ற எண். 920/2017 அதன் பிரிவுகள் 279, 304(ஏ) இதச வாக முதல் தகவல் அறிககை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன். 08.11.2017 15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் மற்றும மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.3 மற்றும அ.சா.ஆ,4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17.08.2017 பிம்ஸ் மருத்துவமனை சென்று இறந்துபோன நாகராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 15.15 - 16.15 மணியளவில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் வேண்டுகோல் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சிகள் நரேஷ் ராஜேந்திரன் பிரபு சரவணன் சுரேஷ் ராம்குமார் சங்கர் மற்றும சரவணன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு வழக்கில் விபத்தை ஏற்படுத்திய எதிரி கண்ணதாசன் என்பவரை 08.11.2017 தேதி 18.50 மணிக்கு காவல்நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன்.

இவ்வழக்கில் 10.11.2017 விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN-21-N-1825 என்ற அரசப்பேருந்தையும் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் PY-01-CJ-0941 என்ற ஓண்டா இருசக்கர வாகனத்ததையும் 28.11.2017தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன்.

28.11.2017 தேதி விபத்தை ஏற்படுத்திய மற்றும விபத்துக்குள்ளான வாகனத்திற்கு ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய திண்டிவனம் மோட்டார் வாகன

ஆய்வாளர் பெரியசாமி  என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.  விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN-21-N-1825 என்ற அரசுப்பேருந்தின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ. 6**  ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் PY-01-CJ-0941 என்ற ஓண்டா இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

28.11.2017ம தேதி  இவ்வழக்கில் இறந்தபோன நாகராஜ்  என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பிம்ஸ்  மருத்துவமனை மருத்துவர் சஞ் ஜீவ் ஸ்லட்டர்  என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் பிறகு முதல தகவல் அறிக்கை பதிவு செய்த  உதவி ஆய்வாளர் மனோகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எனது விசாரணையை முடித்து 28.11.2017 அன்று எதிரியின் மீது 279, 304(எ) இதச கீழ்   குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

அசா1 கொடுத்த புகாரில் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

. முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 மற்றும் 15ல்  புகார்தாரர் கையொப்பம் மற்றம் நேரம் இடம்பெறவிலலை என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 34 நாட்கள் காலதாமதாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவா்கள் ஒரே ஊரைச் சோ்ந்தவா்கள் என்றால் சரிதான். புகாரில் இவ்வழக்கில் இறந்த நபா் சாலையின் எந்த திசையில் சென்றாா் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை 10 நாட்கள் காலதாமதமாக ஆய்விற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த காலதாமததிற்கான விளக்கத்தை இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால சரிதான்.

விபத்து ஏற்படுத்தியதாக சொல்லபப்ட்டும் வாகனத்திறகு மோட்டாா் வாகன ஆய்வறிக்கையில் எந்த வித சேதராமமும் இல்லை என்று சான்று வழங்கியுள்ளாா் என்றால் சரிதான்.

இறுதி அறிக்கை 28.11.2017 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்த பிறகு 16 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அ்னுப்பபப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அசா1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று உதவி ஆய்வாளா் சரிவர சாட்சிகளை விசாரிக்காமல் இருந்த வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நானும் சரிவர விசாரணை செய்யாமல தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- (XXXX)

நீதித்துறை நடுவா்,
வானுாா்.